# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

Journal of
# Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)

தொகுதி-8 எண் 4
Vol. 8 No. 4

புரட்டாசி- மார்கழி 2051
October - December 2020

ISSN : 2321-0737



**Chief Editor**
Dr. M. Sadik Batcha

**Advisory Editor**
Dr. Aranga. Pari

**Editorial Board**
Dr. S. Rajaram
Dr. G. Rajagopal
Dr. PM. Jamahir
Dr. P. Velmurugan
Dr. A. Rameez
Dr. E.R. Ravichandran
Dr. K. Thilagavathi
Dr. G. Sheik Meeran
Dr. P. Selvakumar
Dr. Senthil Prakash
Dr. T. Jegathesan
Dr. J. Chandrakala
Dr. T.K. Jasmin Sudha
Dr. R. Tamilselvan
Dr. S. Ramesh
Dr. S. Thangamani
Dr. Vaani Arivalan
Dr. Manivannan Murugesan
Dr. G. Mariappan
Dr. K. Manickaraj


## சான்றிதழ்    Certificate

*This is to certify that Dr. / Mr. / Ms.*


த. இந்திரா பிரியதர்ஷினி
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி (த),வேலூர் - 632002, தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் ச. சுமதி
துறைத் தலைவர் & நெறியாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி (த),வேலூர் - 632002, தமிழ்நாடு, இந்தியா.


*has Published a paper titled*

வைரமுத்து சிறுகதைகளில் சமூகச் சிக்கல்

Sl.No. 189 [213]
Pages 1038-1043


Published by
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com


*Chief Editor*
**Dr. M. Sadik Batcha**
Associate Professor
PG and Research Department of Thamizh
Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 620 020, Tamil Nadu, India
Mobile : 94434 17242, Email : ms_batcha@yahoo.co.in

# வைரமுத்து சிறுகதைகளில் சமூகச் சிக்கல்.

த. இந்திரா பிரியதர்ஷினி
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி (த),வேலூர் - 632002, தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் ச. சுமதி
துறைத் தலைவர் & நெறியாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி (த),வேலூர் - 632002, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

பெண்கள் நாட்டின் கண்கள் என்பர். அதிலும் நம் தாய் திருநாட்டில் பெண்களுக்கென்று தனி மரியாதை உண்டு என்றாலும்,

'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா''

என்கிறார் தேசிக விநாயகம் பிள்ளை.

எதார்த்த வாழ்க்கையில் அவ்வாறு அமைவதில்லை. இன்றும் ஒரு சில இடங்களில் பெண்ணடிமைத் தனம் இருக்கவே செய்கிறது. பெண்களின் உரிமை பறிக்கப்படுவதும், அவர்களின் உழைப்பு சுரண்டப்படுவதும் போன்ற துயரங்கள் நிகழ்ந்துக்கொண்டேதான் இருக்கின்றன.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்

என்றார் மகாகவி பாரதியார். ஆனால் அவரின் கனவு இன்னும் நனவாகி விடவில்லை. ஒவ்வொரு பெண்ணிற்கும் முழு சுதந்திரம் இன்னும் கிடைத்து விடவில்லை. குடும்பம், சமுதாயம், கலாச்சாரம் என்ற பெயரில் பெண்களின் உரிமைகளும், சுயமரியாதைகளும் அன்று முதல் இன்று வரை பறிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது.

பெண் பார்த்தல் (அ) பரிசம் போடுதல் என்ற பெயரில் பெண்ணிற்கு நடக்கும் கொடுமையும், அதன் மூலம் சில அப்பாவி பெண்களின் உயிர் போதலும், தவறேதும் செய்யாமல் பெண்கள் தண்டிக்கப்படுவதும் இன்னும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. இறந்த காலங்கள் இறந்தே போகட்டும் என்னும் சிறுகதையில் பெண்களுக்கு நடக்கும் கொடுமையும், சமூகத்தில் பெண்கள் படும்பாட்டையும் ஆசிரியர் விளக்கிக் கூறியுள்ளார்.

## ஆய்வு நோக்கம்

வைரமுத்து சிறுகதைகளில் 'இறந்த காலங்கள் இறந்தே போகட்டும்' என்னும் சிறுகதையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வுச் சுருக்கம்

'இறந்த காலங்கள் இறந்தே போகட்டும்' என்னும் சிறுகதையினை ஆய்வதின் மூலம் சமூகத்தில் பெண்களுக்கு ஏற்படும் அவலங்கள், பெண் பார்த்தல் என்ற பெயரில் ஒரு பெண்ணே இன்னொரு பெண்ணை கொடுமைப்படுத்தும் அவலம், சில சமூக கலாச்சாரங்களால் பெண்கள் எவ்வளவு பாதிக்கப்படுகிறார்கள். அதனால் சில பெண்கள் உயிர் துறக்கவும் நேரிடுகிறது போன்ற சமூக சிக்கல்களையும் இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகின்றது.

## முத்துராணி

முத்துராணி இறந்துப்போனாள். மேல்மங்கலத்தில் விழுந்த இழவு வாலாந்தூர் வரைக்கும் பத்தே நிமிடத்தில் பரவியது. வேலைக்கு சென்ற ஊர் மக்கள் அனைவரும் வேலையை விட்டுவிட்டு ஓடிவந்தார்கள். ஈயெறும்புக்குத் தீங்கு நினைக்காதவள், நல்ல மனசுக்காரி, தன் வயிறு நிறைந்த உடனே, அனைவருக்கும் கொடுக்கும் குணம் கொண்டவள்,

திருமணமாகாதவள், கன்னி கழியாமல சென்றுவிட்டாள். மோரு கேட்டாத் தயிரு கொடுப்பவள் அவளுக்கா இப்படியொரு சாவு? என்றெல்லாம் ஊர் பேசிக்கொண்டது. ஒருவரின் இறப்பில் ஊர் பேசுவதை வைத்துதான் ஒருவர் நல்லவரா? கெட்டவரா? என்பது தீர்மானிக்கப்படும்.

முப்பத்திரண்டு வயது ஆகிறது முத்துராணிக்கு. திருமணமாகத ஏக்கத்தில் இறந்துவிட்டதாக ஊர் பேசுகிறது. முத்துராணியின் தாய்க்கு அழுகை வருகிறது. கண்ணீர் வரவில்லை, மனது மறத்துவிட்டது. முத்துராணியின் அண்ணன் கோட்டச்சாமி அழுக்கு வேட்டி வாயில அழுத்திக்கிட்டேயிருக்கான் அவ்வளவு துக்கம் அவனுக்கு. முத்துராணியின் அண்ணி செல்லப்பேச்சி மூன்று மாதம் முன்பு திருமணமாகி வந்தவள். அனைவரும் அழுகையை நிறுத்திய பின்பும் அழுதுகொண்டே இருந்தாள்.

தூக்குப் போட்டு தற்கொலை செய்ததால் வெகுசீக்கிரமே அடக்கம் செய்தனர் முத்துராணியின் சடலத்தை.

### பெண் பார்க்கும் சம்பிரதாயம்

முத்துராணியின் உயிர் போனதற்கு அந்த ஊரின் சம்பிரதாயம் தான் காரணம். பெண்ணை பரிசம் போடும் போது மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் கூட்டமாக வருவார்கள். தட்டில் பழம், பூ, தேங்காய், புடவை, இரவிக்கை, உள்பாவாடை அனைத்தையும் சேர்த்து பெண்ணின் அம்மாவிடம் மாப்பிள்ளையின் அம்மா கொடுப்பாள். பெண் வந்து கும்பிட்டுவிட்டு தட்டை வாங்கிக் கொண்டு உள்ளே செல்வாள். பெண்ணின் கூடவே மாப்பிள்ளையின் சகோதரியும் உள்ளே செல்லுவாள். அப்பொழுதுதான் பெண்ணிற்குப் பிரச்சனையே ஆரம்பிக்கும்.

### மாப்பிள்ளையின் சகோதரி நாத்துணையார்

புடவை மாற்றும் அறையில் உள்தாழ்ப்பாள் போடுவாள் நாத்துணையார். முதலில் தட்டில் இருக்கும் பூவை எடுத்து பெண் தலையில் வைப்பாள், பூ வைக்கும் சாக்கில் சடையை பிடித்து ஒரு இழு இழுப்பாள் நாத்துணையார். இழுக்கும் வேகத்தில் தலையில் மின்னல் வெட்டும் பெண்ணிற்கு. சவுரி முடியாக இருக்குமோ என்ற சந்தேகம். திடீர்னு கிச்சுக்கிச்சு மூட்டி சிரிக்க வைப்பாள். பல் சொத்தையாக இருக்குமோ என்ற சந்தேகம். சில பெண்கள் ஓடிப்பிடித்து விளையாடுவார்களாம் கால் ஊனமாக இருக்குமோ என்ற சந்தேகம், பெண்ணிற்கு புடவை கட்டும் சாக்கில் உள்வேவு பார்ப்பார்களாம். தோல் வியாதி, தழும்பு ஏதாவது இருக்கானு பார்ப்பார்களாம்.

சில கெட்ட சாதிப் பெண்கள் வெங்காயத்தை வெட்டி ஒளிச்சு வைத்துக்கொண்டு பெண்ணின் கால் இடுக்கில் தடவி விடுவதும் உண்டாம். வேண்டாத வியாதியோ தோல் புண்ணோ இருந்தால் அந்தப் பெண் அலறி அடித்துக்கொண்டு துடிப்பாளாம். அதைப் பார்த்து விட்டு அந்தப் பெண்ணை வேண்டாம் என்று ஒதுக்கி விடுவார்களாம்.

> ‘முருங்கக்காய வளச்சுப்பார்த்து வாங்கணும்; வெண்டைக்காயக் கிள்ளிப் பார்த்து வாங்கணும்; தேங்காயச் சுண்டிப் பார்த்து வாங்கணுங்கிறோமே, வம்ச விருத்திக்கு வாரவளச் சலிச்சு எடுக்கணுமா இல்லையா?’ அவுக கேள்வி.[2]

இது வழிவழியாக வர வழக்கம். இதில் ஒரு குற்றமும் இல்லையென்றால் தான் அந்தப் பெண்ணை திருமணம் செய்ய நிச்சயிப்பார்கள், நாத்துணையார் ஏதாவது அந்தப் பெண்ணைப் பற்றி குறை கூறிவிட்டால் வந்தவர்கள் பந்தியில் உட்கார மாட்டார்கள் என்ற வழக்கம் நமக்குத் தெரியவருகிறது. இவ்வாறு பரிசம் போட வந்தவர்களால் நேர்ந்த கதி தான் ஒன்றுமறியா அப்பாவி பெண்ணான முத்துராணியை காவு வாங்கியது.

### முத்துராணியை பரிசம்போட வருதல்

முத்துராணி இளங்கருப்பு, லட்சணமான முகஅமைப்புக் கொண்டவள், சுமாரான உயரம். ஆனால் சற்று குண்டாக இருப்பாள். அவளை நரியூத்து என்ற கிராமத்தில் இருந்து பரிசம் போட

வந்திருந்தனர். மாப்பிள்ளை உடம்பில் வேட்டிகூட நிற்காது. அவ்வளவு ஒல்லியானவன். பத்தாவது வரை படித்துள்ளானாம். மாப்பிள்ளையுடன் அவனுடைய அக்காவும் வந்திருந்தாள். படமெடுக்கும் பாம்பிற்கு பட்டுச்சேலை கட்டினது போல் கடுகடுவென இருக்கிறாள் என்று ஆசிரியர் வர்ணித்துள்ளார்.

பரிசம் போட்டத் தட்டை வாங்கி முத்துராணியுடன் உள்ளே சென்றவள் பத்தாவது நிமிடம் உள்ளேயிருந்து ஓடி வந்தாள். என் தம்பிக்கு பிள்ளை பெற்றவளைக் கட்டி வைக்க மாட்டேன் என்று அனைவரையும் எழுந்து கிளம்பச் சொன்னாள். அதைக் கேட்ட கோட்டச்சாமி அரிவாள் கொண்டு வந்தான். அவர்களை வெட்ட, பரிசம் போட வந்தக் கூட்டம் ஊரைத் தாண்டி ஓடியது. அவர்கள் முத்துராணியை சந்தேகப்பட காரணம் இருந்தது. ஆனால் அதில் உண்மையில்லை. இந்த சம்பவம் நடந்து ஆறு மாதத்திற்குப் பிறகு முத்துராணி சொல்லித்தான் செல்லப்பேச்சியை திருமணம் செய்துக் கொண்டான் கோட்டச்சாமி.

செல்லப்பேச்சி (முத்துராணியின் அண்ணி)

முத்துராணியின் அண்ணி செல்லப்பேச்சியின் அழுகை மட்டும் நிற்கவேயில்லை. தன் வாழ்க்கைக்கு விளக்கேற்றி வைத்தவள், அவள் வாழ்க்கையை முடித்துக் கொண்டாளே என்று வேதனையடைந்தாள். அவர்கள் இருவரும் ஆடிய பல்லாங்குழியைத் தொட்டுப் பார்க்கிறாள், மடித்து வைத்த முத்துராணியின் புடவையை பார்க்கிறாள், தைப் பொங்கலுக்கு முத்துராணி போட்ட சுண்ணாம்புக் கோலத்தை தடவிப் பார்க்கிறாள். அவளின் படத்திற்கு வெள்ளி, செவ்வாய்கிழமைகளில் மாலைப் போட்டு தூபம் காண்பிக்கின்றாள். பெற்ற தாய்க்கும், அண்ணனுக்கும் இல்லாத அக்கறை அண்ணிக்கு இருக்கிறதே என்று தெருவே பேசுகிறது. கணவனைத் தேற்றுகின்றாள் செல்லப்பேச்சி.

> 'மனசு விடாத மச்சான். முத்துராணி சாகல; குலதெய்வமா இருக்கா. இந்த வீடெல்லாம் நெறஞ்சி இருக்கா. இந்தா இன்னிக்காச்சும் இந்த வெத்தலையைப் போடு'[3]

என்று கணவனைத் தேற்றுகின்றாள் செல்லப்பேச்சி. வெற்றிலைப் போடுகிற நிலையில் நான் இருக்கின்றேனா என கோவப்படுகின்றான் கோட்டச்சாமி. செல்லப்பேச்சி, கோட்டச்சாமி ஒரு குணமான ஆண்மகன் என்று நினைத்துதான் திருமணம் செய்துக் கொண்டாள். ஆனால் கோட்டச்சாமியோ தொட்டதற்கெல்லாம் அருவாள் தூக்கிக்கொண்டு ஓடும் மனிதனாக இருப்பான் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. கோட்டச்சாமியை நினைக்கும்போது செல்லப்பேச்சிக்கு பயம் வருகின்றது.

முத்துராணியை இரண்டாவதாக பெண் பார்க்க வந்த தெம்பம்பட்டிக்காரன், இரண்டு பிள்ளைகளைப் பெற்றவன், மனைவியைப் பறிகொடுத்தவன், அவன் கூறிய வார்த்தைதான் முத்துராணியை காவு வாங்கியது.

> 'அய்யா... நான் ரெண்டு புள்ளப் பெத்தவன்; பொண்டாட்டியப் பறிகொடுத்தவன். ஒங்கப் பெண்ணக் கொடுங்க'ன்னு கேட்டான். 'ஒழுங்கு மரியாதையா எந்திரிச்சுப் போயிருங்க'ன்னு சொன்னேன்; போயிருக்கலாம்ல, என்ன சொன்னான்...? நான் மட்டுமா பிள்ள பெத்தவன்...? ஒந்தங்கச்சியும் தானய்யா பிள்ளை பெத்தவ'ன்னான்... அதுக்குப் பெறகுமா நான் மகாத்மா காந்திக்கு மச்சினனா இருக்க முடியுமா? எடுத்தேன் அருவாள; ஓடிட்டான். நீ தான அரிவாளப் புடுங்குன. அன்னைக்கு ராத்திரிதான் எந்தங்கச்சி தூக்குல தொங்கிட்டா. அவ புலியடிச்சி செத்திருந்தா வருத்தப்பட்டிருக்க மாட்டேன். பொய்யடிச்சில்ல செத்துப்போனா'[4]

என வரும் வரிகளில் ஒரு பெண் இறந்துப்போக காரணமான ஊர் வழக்கமும், பெண் பார்க்க வரும் சில பெண்களும் காரணமாக இருப்பது தெரிய வருகிறது.

பதினாறாம் நாள் காரியம்

முத்துராணி இறந்து பதினாறு நாள் ஆகிவிட்டது. யாரையும் கூப்பிடாமல்

முத்துராணியின் அம்மா, அண்ணன், அண்ணி மூன்று பேர் மட்டும் விட்டளவில் காரியம் செய்ய முடிவு செய்தனர். முத்துராணிக்கு பிடித்ததெல்லாம் ஒரே இலையில் வைத்து படையல் போட முடிவு செய்தனர்.

'அவிச்ச வேர்க்கடல - ஆட்டு ஈரல் - தேங்கா - கருப்பட்டி பணியாரம் - மொச்சப் பயிறு - சின்ன வயசுல அவ ஆசையா அள்ளித் தின்ன கரம்ப மண்ணு - பசு வெண்ணெய் இட்ட அரிசி மாவு உருண்டை - எள்ளுச்சீடை - முறுக்கு - கடல முட்டாயி - இன்னும் அவளுக்கு என்னென்ன புடிக்கும்னு ஆத்தாளக் கேட்டுக் கேட்டு ஒரே எலையில ஒண்ணு கூட்டிட்டா செல்லப்பேச்சி[5]

கைகால் கழுவி வந்து தங்கச்சி படத்தைப் பார்த்த கோட்டச்சாமிக்கு கோபம் வந்துவிட்டது.

'ஏ செல்லப்பேச்சி.. அந்தக் கரம்ப மண்ணையும் மாவு உருண்டையும் எடுத்து எறி... எந்தங்கச்சி பொழப்பக் கெடுத்தது இந்த ரெண்டுந்தான்'

ஒன்றும் புரியாத செல்லப்பேச்சி கணவனின் கோபத்தைப் பார்த்து அந்த இரண்டையும் இலையில் இருந்து எடுத்துவிட்டாள். முத்துராணி ஏன் இறந்தாள் என்று இப்போதாவது சொல்லுங்கள் என்று கேட்டாள் செல்லப்பேச்சி.

### முத்துராணியின் தாய் இறப்பிற்கான காரணம் கூறுதல்

சிறிய வயதில் முத்துராணி கரம்ப மண்ணை அதிகமாக தின்றதால் அவளின் வயிறு ஊதிவிட்டது என்றும், மாவு உருண்டையை அதிகமாகத் தின்றதால் உடல் எடை அதிகமாகக் கூடிவிட்டது என்றும் கூறினாள். அவ்வாறு மண்ணையும், மாவையும் தின்றதால் வயிறும் பெருத்துவிட்டது, உடல் எடையும் கூடிவிட்டது முத்துராணிக்கு. எந்த மருத்துவரிடம் சென்று பார்த்தாலும் முத்துராணியின் வயிறு குறையவில்லை. கடைசியாய் ரெங்கசமுத்திரம் நாயக்கர் கொடுத்த லேகியத்தில்தான் முத்துராணியின் வயிறு சன்னமாய்க் குறைந்தது. வயிறு உப்பிக் குறைந்ததில் வயிற்றின் அடிப்பகுதியில் வரிவரியாக் கோடு விழுந்தது முத்துராணிக்கு. இதை அரைகுறையாய்ப் பார்த்த, நரியூத்திலிருந்து வந்த மாப்பிள்ளை விட்டார், முத்துராணி பிள்ளை பெற்றவள் என்று ஊரெல்லாம் பரப்பி விட்டனர். அதைப் பார்த்த தெப்பம்பட்டிக்காரனும் முத்துராணி பிள்ளை பெற்றவள் என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான். அவமானம் தாங்காமல் எந்தத் தவறும் செய்யாத என் அன்பு மகள் தூக்கில் தொங்கினாள் என்று அழுதுக் கதறினாள் முத்துராணியின் தாய். அதைக் கேட்ட செல்லப்பேச்சிக்கு,

'துணுக்'குன்னுச்சு செல்லப்பேச்சிக்கு. விண்ணுவிண்ணுன்னு தெறிச்சு விண்டு பொளக்குது மண்ட. மரவண்டு போல அவ மனசக் கொடஞ்ச கேள்விக்கு இன்னைக்குப் பதில் வந்திருச்சு. அவ படத்தக் கும்பிட்டு நிக்கக் கடகடன்னு கண்ணீராகக் கொட்டுது.[6]

முத்துராணியின் தாய் கூறியதைக் கேட்ட செல்லப்பேச்சிக்கு மனதில் ஒரு பயம் தொற்றிக்கொண்டது. தவறு செய்த ஒரு பெண்ணின் மனநிலை செல்லப்பேச்சியின் வாயிலாக காட்டியுள்ளார் ஆசிரியர்.

### செல்லப்பேச்சியின் கடந்த காலம்

பதினாறாம் நாள் காரியம் முடிந்த அன்று இரவு செல்லப்பேச்சியும், கோட்டச்சாமியும் கட்டிலில் ஒருவரையொருவர் பார்க்காமல் முதுகுக்காட்டிப் படுத்துக் கொண்டிருந்தனர். செல்லப்பேச்சியின் அழுகை மட்டும் நிற்கவேயில்லை. கோட்டச்சாமி முத்துராணியின் அழுகையை சமாதானம் செய்ய முயல்கிறான். கட்டிலில் படுத்துக் கிடந்தவள் எழுந்து கணவன் கோட்டச்சாமியின் கால்களைக் கட்டிக்கொண்டு 'ஓ'வென்று கதறி அழுதாள்.

'என்ன மன்னிச்சிரு மச்சான். ஒன்னய நான் ஏச்சுப்புட்டேன். எனக்கு நீங்க பரிசம் போட வந்தன்னைக்கு எனக்குச் சீலகட்டிவிட முத்துராணி உள்ள வந்தா. என் வயித்து மடிப்பப் பார்த்து தெகச்சிப் போயி

நின்னுட்டா. 'ஆமாடி தாயி... நான் பிள்ளப் பெத்தவதான். என்னக் காட்டிக்கொடுத்து என் பொழப்பக் கெடுத்துறாத'ன்னு கையெடுத்துக் கும்புட்டு அவ காலப்புடிச்சேன். செத்தவடம் பேச்சு மூச்சில்லாம நின்னா; பிறகு சொன்னா"

'ஒம் பொழப்ப நான் ஏன் கெடுக்கணும்? என் வகுத்துல இருக்கிற மாதிரி உன் வகுத்துலயும் சுருக்கம் இருக்குனு நெனச்சிட்டு போறேன். சீலயக் கட்டு. பொண்டாட்டியான பெறகாச்சும் எங்கண்ணனுக்கு நேர்மையா இரு..."

என்று தன் கணவனிடம் கூறி அழுதாள் செல்லப்பேச்சி. கோட்டச்சாமி காலைப் பிடித்துக்கொண்டு அழுதவள் சட்டென்று எழுந்து மூலையில் கிடந்த அருவாளை எடுத்து கணவனிடம் கொடுத்து, தன்னை வெட்டிவிடும்படிக் கூறினாள். தெரிந்து அந்தத் தவறைச் செய்யவில்லையென்றுக் கூறி மன்னிப்புக் கேட்டாள். மன்னிக்க முடியவில்லையென்றால் அருவாள் கொண்டு வெட்டிவிடும்படி கூறிய பெண்ணின் மனநிலையும், அவள் தெரிந்து அந்தத் தவறைச் செய்யவில்லையென்பதும், தெரியாமல் செய்தத் தவறுக்காக அவள் வருந்தும் விதமும் மிகவும் நேர்த்தியாகக் கூறியுள்ளார் ஆசிரியர் வைரமுத்து.

### கோட்டச்சாமியின் மனநிலை

செல்லப்பேச்சியின் வார்த்தையைக் கேட்ட கோட்டச்சாமிக்கு பிரமை பிடித்தது. பேச்சு மூச்சு இல்லாதவன் போல ஆனான் கோட்டச்சாமி. கண்மூடி யோசித்தான். நெத்தியில உள்ளங்கை வைத்து அழுத்திக் கொண்டே இருந்தான். நீண்ட யோசனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தான். அரிவாளை ஒரு ஓரமாக வைத்தான். கவிழ்ந்துக் கிடந்த தன் மனைவியின் தோள் பட்டையை அழுத்திப் பிடித்தான்.

ஏற்கனவே ஒரு பொய்யினால் ஒரு உயிர் போனது போதும். இப்பொழுது ஒரு உண்மையினால் இன்னொரு உயிர் போகவேண்டாம். பொய்தான் சொல்லும், மெய் சொல்லாது என் தன் மனைவியின் முகத்தை தன் முகத்தோடு சேர்த்துக் கொண்டான். அவள் முகத்தை எடுத்து தன் நெஞ்சில் அணைத்துக்கொண்டான்.

'அவன் நெஞ்சு ரோமமெல்லாம் மசமசன்னு நனையுது கண்ணீருல"

### முடிவுரை

'இறந்த காலங்கள் இறந்தே போகட்டும்' என்னும் சிறுகதை வாயிலாக, சராசரியாக நடுத்தர வர்க்கத்தில் பிறந்த ஒரு பெண் படும்பாட்டைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

பெண் பார்க்க வரும் மாப்பிள்ளை வீட்டார், மாப்பிள்ளையின் சகோதரி பெண்ணை நாத்துணையார் விளையாட்டு என்ற பெயரில் கொடுமைப்படுத்தும் விதம் நன்றாக தெரியவருகிறது. ஆடை மாற்றும்போது பெண்ணின் அறைக்குள் சென்று, அவர்களின் ஆடைகளைக் களைந்து பார்த்தல், கையில் வெங்காயம் வைத்துக் கொண்டு கால்களின் நடுவில் பிய்ச்சி விடுதல், அடிவயிற்றில் தடவிப் பார்த்து கோடுகள் ஏதாவது உள்ளதா எனப் பார்த்தல் போன்ற அவலங்கள் பெண்ணிற்கு நடந்துள்ளது இக்கதையின் வாயிலாக நமக்குத் தெரியவருகிறது.

இதனால் தவறேதும் செய்யாத முத்துராணிப் போன்ற அப்பாவி பெண்கள் பலியாகின்றனர் என்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. வெறும் வயிற்றில் வரும் கோடுகளை மட்டும் பார்த்து ஒரு பெண்ணை தவறாக புரிந்துக்கொள்ளக் கூடாது என்பதற்கு இக்கதை மிகச் சரியான சான்று ஆகும்.

அது மட்டுமல்லாமல் முத்துராணி, அண்ணி செல்லப்பேச்சி திருமணத்திற்கு முன்பாக குழந்தை பெற்றவள் என்பது தெரிந்தும் தன் அண்ணனுக்கு அவளைத் திருமணம் செய்து வைக்கும் விதம் மிகவும் போற்றத் தகுந்தது. முத்துராணி போன்ற நல்லெண்ணம் கொண்ட பெண்களும் இருக்கத்தான்

செய்கின்றனர் என்பது இக்கதையின் மூலமாக ஆசிரியர் கூறியுள்ளார். தன் வயிற்றில் உள்ள கோடுகளைப் போல நினைத்துக் கொள்கிறேன் என்று கூறிய முத்துராணியின் உயரிய தாய்மையுள்ளம் இக்கதையின் மூலம் வெளிப்படுகின்றது.

அறியாத வயதில் தெரியாமல் செய்த தவறுக்காக வருந்தி மன்னிப்புக் கேட்டும் செல்லப்பேச்சியின் குணம் போற்றும்படியாக உள்ளது. தவறு செய்யாத மனிதரில்லை. அத்தவறை திருத்திக்கொண்டு தன் கணவனுக்காக வாழும் பெண் பாத்திரமாக செல்லப்பேச்சி படைக்கப்பட்டுள்ளாள்.

தன் தங்கையின் உயிர் தவறு செய்யாமலேயே பறிக்கப்பட்டுவிட்டது. ஆனால் தன் மனைவி அறியாமல் தவறு செய்துவிட்டதை மன்னிக்கும் கோட்டச்சாமியின் மனப்பாங்கு மிகவும் அருமை. இன்று கணவன் மனைவி சிறு சண்டைக்காக கூட நீதிமன்றத்தை அனுகி விவாகரத்து பெற்றுவிடுகின்றனர். ஆனால் கோட்டச்சாமி போன்று கல்வியறிவில்லாத ஆண்கள் மனைவி செய்த தவறை மன்னித்து வாழப் பழகியுள்ள விதம் இன்றையத் தலைமுறையினருக்கு சரியான பாடமாகும்.

பெண் பார்க்கும் சடங்கின்போது பெண்ணின் மனதைப் பார்த்து பெண் எடுக்க வேண்டுமே தவிர பெண்ணின் கடந்தகால வாழ்க்கையை பரிசோதித்து பெண்ணை காயப்படுத்தக் கூடாது என்று ஆசிரியர் அருமையாகக் கூறியுள்ளார்.

முத்துராணி போன்ற பெண்களின் மரணத்திற்கு இச்சமூகமும், சமூகத்தில் கடைபிடிக்கப்படும் மூட பழக்க வழக்கங்களும் காரணமாக இருக்கின்றன. பெண் என்ற மாபெரும் சக்தியைச் சில கலாச்சார பழக்க வழக்கங்களால் நாம் இழந்துவிடக்கூடாது என்பதற்கு இக்கதை மிகப்பெரும் சான்று. நம் இந்திய நாட்டில் ஒவ்வொரு பெண்ணும் பாதுகாக்கப்பட வேண்டியவள், போற்றப்பட வேண்டியவள் என்பதை இக்தையின் ஆசிரியர் அழகாகக் கூறியுள்ளார். இக்கதையினைப் படிக்கும் வாசகர்களாகிய நாமும் மாறுவோம், சமூகத்தையும் மாற்றுவோம்.

**சான்றெண் விளக்கம்**

1. www.dinamani.com
2. வைரமுத்து சிறுகதைகள், சூர்யா லிட்ரேச்சர் (பி) லிட்., சென்னை-24, ப.75
2. வைரமுத்து சிறுகதைகள், ப.77
3. வைரமுத்து சிறுகதைகள், ப.77
4. வைரமுத்து சிறுகதைகள், ப.78
5. வைரமுத்து சிறுகதைகள், ப.79
6. வைரமுத்து சிறுகதைகள், ப.80
7. வைரமுத்து சிறுகதைகள், ப.80
8. வைரமுத்து சிறுகதைகள், ப.81